**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 173 BNSS)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364101

1. District : ஈரோடு PS: ஊஞ. கபரிய Year: 2026 FIR No: 03/2026 Date: 10.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC ACT, 1988 as amended Sections பிரிவுகள்: 7(a), 7A, 12 r/w 7(a)
(ii) Act சட்டம்: by PC (Amendment) Act Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 04.06.2026 Date to : 04.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.40 hrs Time to : 19.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 05.06.2026 Time : 09.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) GD Vol I 10.06.2026 Time : 17.00hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 15 கி.மீ வடக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் பவானி சார்பதிவாளர் அலுவலகம். ஈரோடு.
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் .

6. Complainant /Informant (a) Name : C. தென்னரசு (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தனிவட்டாட்சியர் (g) Address : சிறப்பு அலுவலர் மற்றும் தனி வட்டாட்சியர் (அகழாய்வு நிலங்கள்), முகவரி இந்து சமய அறநிலையத்துறை, ஈரோடு.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. R. ராஜாராயம் (45), உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), பவானி சார்பதிவாளர் அலுவலகம், ஈரோடு மாவட்டம்.
2. S. தினேஷ் (30), S/o தீருநாவுக்கரசு, 28, தருநிலகண்டாபுரம், அந்தியூர், ஈரோடு.
3. S. ஹரிஹரன் (29), S/o தனிவாசன், 11B, கோனாரோல் இல்லம், நேவரம், பவானி, ஈரோடு

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Procedural delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விபரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிணவிசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைப்பட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பதியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறைப்பட்டாருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைப்பட்டார் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகை பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11.06.2026 11.00 hrs

Name: பெயர் K. ஜெகதீ
Rank: நிலை தலைமை தலைமை காவலர்
மகளிர் சா.க. பிரிவு,
சேலம்.

Attachment to Column 12 of Erode V&AC, Cr.No.03/AC/2026, u/s 7(a), 7A, 12 r/w Section 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018

சமர்பிக்கப்படுகிறது:

05.06.2026 ஆம் தேதி 09.00மணிக்கு திரு.C.செல்வக்குமார், தனிவட்டாட்சியர் (ஆலயநிலங்கள்) இந்துசமய அறநிலையத்துறை, ஈரோடு மற்றும் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர்: C.செல்வக்குமார், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர்/தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்), இந்துசமய அறநிலையத்துறை, ஈரோடு. பெறுநர்: காவல் துணைகண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, ஈரோடு. அம்மா, 04.06.2026-ம் தேதி வியாழக்கிழமை, ஈரோடு மாவட்டம், பவானி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து, சார்பதிவாளர் பொறுப்பில் பணிபுரியும் உதவியாளர் திருமதி.வைடூரியம், அவர்கள், ஆவணங்களை பதிவு செய்தல், வில்லங்க சான்று வழங்குதல் மற்றும் இதர பதிவுத்துறை பணிகளுக்காக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடமிருந்து ஆவண எழுத்தர்கள் மூலமாக லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய என் தலைமையில் ஈரோடு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திருமதி.சாந்தி, காவல் ஆய்வாளர் திருமதி.ரேகா மற்றும் காவல் குழுவினருடன் மாலை சுமார் 15.40 மணிமுதல் மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்கே சார்பதிவாளர் பொறுப்பில் பணிபுரியும் உதவியாளர் திருமதி.வைடூரியம் அவர்களுக்கு களப்பணி பார்ப்பதற்காகவும், ஆவண பதிவுக்காகவும், ஆவண பதிவு முடிந்ததும் கொடுப்பதற்காக கதிர்வேல் அட்வகேட் என்ற ஆவண எழுத்தர் அவர்களின் அலுவலகத்தில் ஜூனியராக பணிபுரிந்து வரும் S.தினேஷ், த/பெ சுந்தரவடிவேல், 28, திருநீலகண்டன் வீதி, அந்தியூர், ஈரோடு மாவட்டம் என்பவர் தனது பேண்ட்டின் வலதுபக்க பின்பாக்கெட்டில் ரூ.10,000/- (500 X 20) ஒரு கற்றையாகவும், ரூ.3,000/- (500 X 4=2000, 200 X 5=1000) ஒரு கற்றையாகவும் வைத்திருந்த தொகை மொத்தம் ரூ.13,000/- மற்றும் உமாசங்கர் என்ற ஆவண எழுத்தர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வரும் S.ஹரிஹரன், த/பெ ஸ்ரீனிவாசன், கமலாதாமஸ் இல்லம், க.எண்116, தேவபுரம் வீதி, பவானி, ஈரோடு மாவட்டம் என்பவர் தனது சட்டையின் மேல் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.5,000/- (500 X 10) ஒரு கற்றையாகவும், ரூ.5,000/- (500 X 10) மற்றொரு கற்றையாகவும், மொத்தம் ரூ.10,000/-, அவரது பேண்ட்டின் வலதுபக்க சைடு பாக்கெட்டில் ரூ.9,500/- (500 X 19) ஒரு கற்றையாகவும், ரூ.2,500/- (500 X 5) ஒரு கற்றையாகவும், மொத்தம் ரூ.12,000/- மற்றும் பேண்டின் இடது பக்க

பின்பாக்கெட்டில் இருந்து கற்றையாக ரூ.50,000/- (500 X 100) வைத்திருந்த மொத்தம் ரூ.72,000/- என இரண்டு பேர்களிடமும் சேர்த்து மொத்தம் ரூ.85,000/- ஆனது மேற்படி நபர்களால் அந்த தொகை வைத்திருந்ததற்காக முன்னுக்குபின் முரணான காரணங்கள் தெரிவித்ததாலும், பின்னர் திருமதி.வைடூரியம் அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்ததை ஒப்புக்கொண்டதாலும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஹரிஹரன் என்பவர் பதிவுக்காக கொடுத்திருந்த ஆவணங்களான பவானி சார்பதிவக ஆவண எண்கள்.3325/2026, 3303/2026, 3279/2026 மற்றும் 3331/2026 ஆகிய ஆவணங்களின் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல்கள், திரு.தினேஷ் அவர்களால் பதிவுக்காக கொண்டுவரப்பட்ட ஆவணம் பதிவு செய்யப்படாத நிலையில் அதன் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல், பவானி சார்பதிவக அலுவலக வருகை பதிவேட்டின் 2026ம் வருடம் ஜூன் மாத பக்கத்தின் நகல் ஆகியவை திருமதி.வைடூரியம் அவர்களால் சான்றொப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக பெறப்பட்டது. இந்த திடீர் ஆய்வு 04.06.2026-ம் தேதியில் மாலை சுமார் 15.40 மணிமுதல் இரவு 19.00 மணி வரை நடைபெற்றது. இது சம்மந்தமாக எனது நடவடிக்கைகள் நாள் 04.06.2026-ன்படியான நடவடிக்கை குறிப்பு அந்த அலுவலகத்திலேயே தயார் செய்யப்பட்டது. மேலும், இந்த திடீர் ஆய்வில் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை குறிப்பு (1), கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.85,000/-(2), பவானி சார்பதிவக ஆவண எண்கள்.3325/2026, 3303/2026, 3279/2026 மற்றும் 3331/2026 ஆகியவற்றின சான்றொப்பம் செய்யப்பட்ட நகல்கள் (3), திரு.தினேஷ் அவர்களால் பதிவுக்காக கொண்டுவரப்பட்ட ஆவணம் பதிவு செய்யப்படாத நிலையில் திரு.C.பீர்தீப் குமார் என்பவருக்கு அவரது தாத்தா R.கருப்பன் என்கிற கருப்பணன் எழுதி கொடுக்கும் செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் (4), பவானி சார்பதிவக அலுவலக வருகை பதிவேட்டின் 2026-ம் வருடம் ஜூன் மாத பக்கத்தின் நகல் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் (5) ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். எனவே, மேற்படி சார்பதிவாளர் பொறுப்பில் பணிபுரியும் உதவியாளர் திருமதி.வைடூரியம் மற்றும் திருமதி.வைடூரியம் அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக பணம் வைத்திருந்த S.தினேஷ், த/பெ சுந்தரவடிவேல் மற்றும் S.ஹரிஹரன், த/பெ ஸ்ரீனிவாசன் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd xxxxx) (C.செல்வக்குமார்) இடம்: ஈரோடு. நாள் : 05.06.2026 இணைப்பு: (1) சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் குறிப்பு நாள் 04.06.2026, (2) கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.85,000/-, (3) பவானி சார்பதிவக ஆவண எண்கள்.3325/2026, 3303/2026, 3279/2026 மற்றும் 3331/2026 சான்றொப்பம் செய்யப்பட்ட நகல்கள், (4) திரு.தினேஷ் அவர்களால் பதிவுக்காக கொண்டுவரப்பட்ட ஆவணம் பதிவு செய்யப்படாத நிலையில் திரு.C.பீர்தீப் குமார் என்பவருக்கு

அவரது தாத்தா R.கருப்பன் என்கிற கருப்பணன் எழுதி கொடுக்கும் செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல், (5) பவானி சார்பதிவக அலுவலக வருகை பதிவேட்டின் 2026-ம் வருடம் ஜூன் மாத பக்கம் ஆகியவற்றின் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல்.

Sir,

Received the complaint on 05.06.2026 at 09.00 hrs, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Crime No.03/AC/2026, u/s 7(a), 7A, 12 r/w Section 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018 on 10.06.2026 at 17.00 hrs (sd xxxxx), 10.06.2026 (K.Shanthi), Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Erode.

Original FIR along with the original typed complaint and surprise check proceedings of Tr.C.Selvakumar, Special Inspection Cell Officer / Special Tahsildar, Hindu Religious and Charitable Endowments Department (Temple Lands), Erode is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and copy of FIR submitted to Director, Vigilance and Anti-Corruption, Chennai

10/06/2026

(K.Shanthi)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.